TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under ~~Section 154 Cr.P.C.~~) 173 BNSS
(கு.த.வி.நெ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213078

1. District மாவட்டம் : **Tenkasi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Tenkasi** Year ஆண்டு **2024** FIR No. மு.த.அ. எண் **09/2024** Date நாள் **01.07.2024**

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: **PC Act 1988 as Amended in Act 16 of 2018** Sections பிரிவுகள்: **7**
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **01.07.2024** Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் **13.50 hrs** Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **01.07.2024** Time : நேரம் **17.30 hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **01.07.2024** Time : நேரம் **18.30 hrs**

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Written**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **Revenue Inspector office, Tenkasi Taluk, 2 Km South East**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **S.Kathiresan**
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **Tr.Subbiah**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **05.02.1990**
   (d) Nationality : நாட்டினம் **Indian**
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் **Driver**
   (g) Address : முகவரி **11/216 Gandhipuram street, Mathalamparai, Tenkasi District.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **Tr.Dharmaraj, Revenue Inspector, Tenkasi Taluk, Tenkasi District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   **No Delay**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

**Not arise**

10. Total value of properties stolen / involved : ----
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ----
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கிறேன். இன்று 01.07.2024 ஆம் தேதி மாலை 17.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் C.ஜெயஸ்ரீ ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது தென்காசி மாவட்டம், மத்தளம்பாறையை சேர்ந்த திரு.சு.கதிரேசன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட தென்காசி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் வருவாய் ஆய்வாளராக பணிபுரியும் திரு.தர்மராஜ் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 01.07.2024 ஆம் தேதி மாலை 18.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2024 u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended in Act 16 of 2018 என வழக்கு பதிவு செய்தேன். அனுப்புநர் சு.கதிரேசன், வயது. 34/2024, த.பெ.சுப்பையா, 11/216

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1.7.2024

04/07/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும் 01.07.2024 at 19.30 hrs

Name: பெயர் ........ C.JAYASREE Inspector of Police,
Rank: நிலை ........ V&AC, Tenkasi.

காந்திபுரம் தெரு, மத்தளம்பாறை, தென்காசி மாவட்டம். 627814. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தென்காசி மாவட்டம். ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் எனது அண்ணன் சுரேஷிக்கு சொந்தமான வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் தென்காசி அருகே மேலகரம் இம்மானுவேல் பள்ளியில் வேன் டிரைவராக வேலை செய்கிறேன். எனக்கு கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு மத்தளம்பாறையை சேர்ந்த ரம்யா என்பவருடன் திருமணம் ஆனது. எனது மாமனார் திரு.ரமேஷ் (லேட்) வழியில் பூர்வீக இடம் மத்தளம்பாறை கிராமம் சர்வே எண்.830ஏ/2ஏ2-ல் 3 செண்ட் இடம் இருந்தது. எனது மாமனார் 2019 ஆம் ஆண்டில் காலமாகிவிட்டார். மேற்படி சொத்திற்கு வாரிசுகளான எனது மாமியார் இசக்கியம்மாள், எனது மனைவியும், மச்சினன் சந்தோஷ்குமார் ஆகியோர் இருந்தார்கள். எனது மாமியாருக்கு பணத்தேவை இருந்ததால் மூன்று பேரிடமிருந்தும் அந்த இடத்தினை கிரையத்திற்கு வாங்கினேன். அந்த இடத்திற்கான பட்டாவினை எனது பெயரில் பட்டா எண்.2211 என பெயர் மாற்றம் செய்துள்ளேன். அந்த இடம் பல ஆண்டுகளாக தரிசாக இருந்து வருகிறது. எனவே அந்த இடத்தில் கடை கட்டுவதற்காக தரிசு நில சான்று வேண்டி ஒரு மனுவினை 25.05.2024 ஆம் தேதி தென்காசி தாசில்தார் அலுவலகத்தில் வைத்திருந்த மனுபெட்டியில் போட்டேன். 2 நாட்கள் கழித்து நான் தாலுகா அலுவலகம் சென்று மனு தொடர்பாக அங்கிருந்த அலுவலரிடம் விபரம் கேட்டபோது, அவர் எனது மனுவினை பதிவேட்டில் எழுதிவிட்டு சீல் வைத்து என்னிடம் கொடுத்து, தென்காசி RI அலுவலகத்தில் கொடுக்க சொன்னார். நான் தென்காசி RI அலுவலகம் சென்றபோது அங்கிருந்த பெண் ஊழியர் ஒருவரிடம் மனுவினை கொடுத்தேன். அந்த மனுவில் Forward to VAO என்று எழுதி என்னிடம் கொடுத்து மத்தளம்பாறை VAO அலுவலகத்தில் கொடுக்க சொன்னார். அன்றைய தினமே மத்தளம்பாறை VAO அலுவலகத்தில் இருந்த VAO 29.05.2024 ஆம் தேதி என்னை வரச்சொன்னார். நான் VAO அலுவலகம் சென்றபோது, VAO அவர்கள் இடத்தினை நேரில் பார்க்க வேண்டும் என்று சொல்லி, நேரில் வந்து பார்த்துவிட்டு, அடங்கலில் தரிசு என்று எழுதியும், மனுவில் மேற்படி இடம் குறித்து அவரது அறிக்கையை எழுதி RI அலுவலகத்தில் கொடுக்குமாறு என்னிடம் கொடுத்தார். நான் அன்றைய தினமே RI அலுவலகம் சென்று RI திரு.தர்மராஜ் அவர்களிடம் கொடுத்தேன். அவரும் மனுவினை பார்த்துவிட்டு இடத்தினை நேரில் பாரக்க வேண்டும் என்று சொன்னார். நான் அவரது செல்போன் எண் 9952793036-ஐ வாங்கினேன். 05.06.2024 ஆம் தேதி எனது செல்போன் எண் 9791473689-லிருந்து RI-க்கு போன் செய்து விபரம் கேட்டபோது, சாயங்காலம் 5 மணிக்கு எனது இடத்திற்கு நேரில்

பார்வையிட வருவதாக சொன்னார். இடத்தினை பார்த்துவிட்டு அடங்கல் 5 வருடத்திற்கு வேண்டும். ஆனால் மனுவில் அடங்கல் 2 வருடத்திற்கு மட்டும் தான் உள்ளது. மீதம் 3 வருடத்திற்கு அடங்கல் வாங்கி கொடுக்க சொல்லிவிட்டு, மேற்படி மனுவினை பரிந்துரை செய்து தாலுகா அலுவலகம் அனுப்புவதற்கு தனக்கு ரூ.20,000/- லஞ்சமாக வேண்டும் என்று கேட்டார். நான் என்னிடம் அவ்வளவு பணம் கிடையாது என்று சொன்னேன். அதற்கு அவர் அப்போ ரூ.15,000/- கொடு என்றார். அதுவும் இல்லை என்று கூறியபோது, ரூ.10,000/- கொடுக்க சொன்னார். அதுவும் என்னால் கொடுக்க இயலாது என்று சொன்னபோது, அப்போது ரூ.5,000/- கொடு, பணம் கொடுக்கலனா வேலை நடக்காது என்று கூறினார். பின்னர் சுமார் 1 வாரம் கழித்து நானும் தாலுகா அலுவலகத்தில் மனு செய்து 3 வருடத்திற்கான அடங்கல் வாங்கி RI அவர்களிடம் அவரது அலுவலகத்தில் வைத்து 21.06.2024 ஆம் தேதி கொடுத்தேன். அப்போது பணம் கொண்டுவந்திருக்கியா என்று கேட்டார். நான் கொண்டு வரவில்லை என்று சொன்னேன். மீண்டும் எனது மனுசம்பந்தமாக இன்று 01.07.2024 ஆம் தேதி தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரிக்க சென்றபோது, அந்த பிரிவில் ஆள் இல்லாததால் மதியம் 01.50 மணிக்கு RI அலுவலகம் சென்று RI அவர்களிடம் மனு சம்பந்தமாக கேட்டபோது ரூ.5,000/-உடன் நாளை வா என்று கறாராக கூறிவிட்டார். நாளை நான் எப்போது வரவேண்டும் என்று கேட்டபோது செல்போனில் பேசிவிட்டு வா என்று கூறினார். அரசு வேலையை செய்வதற்கு தென்காசி RI திரு.தர்மராஜ்-க்கு லஞ்சமாக ரூ.5,000/- பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால், அவர்மீது நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். இப்படிக்கு (sd S.Kathiresan)

Sir, Received the Petition on 01.07.2024 at 17.30 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.09/2024 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 01.07.2024 at 18.30 hrs. sd.C.JAYASREE, Inspector of Police, V&AC, Tenkasi.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

C Jayasree 01/07/24
C. JAYASREE
INSPECTOR OF POLICE
V&AC TENKASI